# கொரோனா காலத்தில் எடப்பாடி பழனிச்சாமி கிழித்தது என்ன?

**கொ**ரோனா காலத்தில் தான் ஏதோ மக்களை காத்து கிழித்துவிட்டதை போல எடப்பாடி பழனிச்சாமி சவுண்டு விட்டுக் கொண்டிருக்கிறார். கொரோனாவைவிட கொடூரமான ஆட்சியை நடத்திக்கொண்டிருந்தவர் எடப்பாடி பழனிச்சாமி. மருத்துவமனைகளில் மருந்துகள் இல்லை. படுக்கைகள் இல்லை. ஆக்சிஜன் கிடைக்கவில்லை. பிளீச்சிங் பவுடரை ஆங்காங்கே தூவி கொரோனாவை கட்டுப்படுத்துவதாக நாடகமாடினார்கள். அந்த பவுடரை வாங்கியதிலும் ஊழல் நடந்ததாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.

கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் வீடுகளில் நோட்டீஸ் ஒட்டி மக்களை உளவியல் சித்திரவதைக்கு ஆளாக்கி னார்கள். வீடுகளும் தெருக்களும் தகரம் வைத்து தடுக்கப்பட்டு மக்கள் அவதிக்குள்ளாக்கப்பட்டார்கள். இ-பாஸ் என்ற நடைமுறையால் மக்களுக்கு நெருக்கடி கொடுக்கப்பட்டது.

மக்களுக்கு எங்கும் வேலையில்லை கையில் காசு இல்லை. வரலாறு காணாத துயரத்தை மக்கள் அனுபவித்தார்கள். கையாலாகாத எடப்பாடி அரசு சுகாதார துறை செயலாளர் டெல்லி தப்லீக் ஜமாத் மூலமாகத்தான் கொரோனா பரவியது என்று பகிரங்கமாக இஸ்லாமிய மதவெறுப்பை பரப்பினார்.

தமிழ்நாட்டின் பல ஊர்களில் இஸ்லாமியர்களின் கடைகளில் பொருள் வாங்காதீர்கள் என்று சங்கிகள் பரப்புரை செய்தார்கள். அவர்கள் மேல் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக இஸ்லாமிய அமைப்புகளை சேர்ந்தவர்களோ எவரும் நெருங்க அஞ்சிய கொரோனாவில் இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்காக முன் நின்றார்கள்.

திமுக தொண்டர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ எங்கெங்கும் களத்தில் நின்றார்கள். நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். அந்த பணியில் ஈடுபட்டிருந்த திமுக சட்டமன்ற உறுப்பினர் ஜெ. அன்பழகன் கொரோனா தொற்றுக்கு ஆளாகி மரணமடைந்தார்.

முழு இயக்கத்தையும் கொரோனா நிவாரணப் பணிகளில் அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஈடுபடுத்தினார். அன்றைய அ.தி.மு.க. அரசு கொரோனா தடுப்பு நடவடிக்கையில் அடைந்த தோல்விகளை ஒவ்வொரு நாளும் அறிக்கைகளில் சுட்டிக்காட்டி என்ன செய்யவேண்டும் என்பதை அறிவுறுத்தினார். ஆனால் கேளாச்செவிகளை உடைய எடப்பாடி பழனிச்சாமி கொரோனாவில் இறந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை மூடி மறைப்பதிலேயே குறியாக இருந்தார். ஆனால் தி.மு.க. அரசு அறிக்கைகளிலுள்ள முரண்பாடுகளை சுட்டிக்காட்டி உண்மையாக இறந்தவர்களின் எண்ணிக்கையை அம்பலப்படுத்தியது.

இதே கொரோனா ஊரடங்கு காலத்தில்தான் எடப்பாடி பழனிச்சாமியின் காவல்துறை சாத்தான்குளம் காவல் நிலையத்தில் தந்தையையும் மகனையும் அடித்து கொன்றது. ஆனால் அவர்கள் இருவரும் உடல்நலக் குறைவினால் இறந்தார்கள் என்று நெஞ்சில் ஈரமே இல்லாமல் நியாயப்படுத்தியவர் எடப்பாடி பழனிச்சாமி. அந்தக் குற்றத்தில் ஈடுபட்ட 9 பேருக்கும் சமீபத்தில் நீதிமன்றம் மரண தண்டனை அளித்தது. உண்மையிலேயே அது எடப்பாடி ஆட்சிக்கு விதித்த தண்டனையாக கருதப்பட வேண்டும்.

அ.தி.மு.க.வினர் தங்களது எடப்பாடி பழனிச்சாமி ஆட்சியின் சாதனையாக அவ்வப்போது குறிப்பிடுவது பத்தாம் வகுப்பில் அனைவருக்கும் ஆல் பாஸ் போட்டதைத் தான். ஆனால் அப்படி பாஸ் போடப்பட்ட இளைஞர்கள் இன்றைக்கும் நேர்முகத் தேர்வுகளில் ‘கொரோனா பேட்ஜ்’ என்று ஒதுக்கி வைக்கப்படுவதுதான் எதார்த்தமாக இருக்கிறது. கொரோனா காலத்தில் மக்களை பேரழிவிற்கு தள்ளியவர் எடப்பாடி பழனிச்சாமி. அப்போதுகூட தற்காலிகமாக மதுக்கடைகளை மூட மறுத்தார். தி.மு..கவின் கடும் போராட்டத்திற்கு பிறகு மூடினார்.

கொரோனா இரண்டாம் அலை உச்சத்தில் இருந்த போது திமுக ஆட்சிக்கு வந்தது. மருத்துவமனைகளில் போர்க்கால அடிப்படையில் படுக்கைகள் தயார் செய்யப்பட்டன. மக்களுக்கு தேவையான தடுப்பூசிகள், மருந்துகள், ஆக்சிஜன் முதலானவற்றை பெற பெரும் முன்னெடுப்பை செய்தது. ஆட்சிக்கு வந்ததும் உடனடியாக 4000 ரூபாய் கொரோனா நிவாரண நிதியாக வழங்கப்பட்டது. வீடுகளுக்கே சென்று காய்கறி விநியோகம் செய்யும்



**மனுஷ்யபுத்திரன்**
மாநில ஆலோசகர், தி.மு.க.
தகவல் தொழில் நுட்ப அணி

முறை செயல்படுத்தப்பட்டது. மூன்று மாதத்திற்குள் மரணங்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்தது. தமிழ்நாடு முழுக்க பெரும் இயக்கமாக தடுப்பூசி செலுத்தப்பட்டது. மூடிக்கிடந்த ஸ்டெர்லைட் ஆலையை திறந்து ஆக்சிஜன் உற்பத்தி செய்யப்பட்டது. முதலமைச்சரே கவச உடை அணிந்து கொரோனா வார்டிற்குச் சென்று நோயாளிகளை பார்வையிட்டதன் மூலம் கொள்ளை நோய்க்கு எதிரான போராட்டத்திற்கு உத்வேகம் அளித்தார். அனைத்தும் அரசு துறைகளும் இப்போராட்டத்தில் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டன. அனைத்து அமைச்சர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் மக்களை காக்கும் போராட்டத்தில் களத்தில் நின்றார்கள். அன்று கொரோனா தடுப்பிற்காக திராவிட மாடல் அரசு மேற்கொண்ட செயல்பாடுகள் தேசிய அளவில் பெரும் பாராட்டு பெற்றன.

ஆனால் எடப்பாடி பழனிச்சாமி கொரோனா காலத்தில் முற்றாக மக்களை கைவிட்ட அவலத்தை மூடிமறைத்துதான் ஏதோ சிறப்பாக செயல்பட்டதைப் போல இப்போது கதைவிட்டு திரிகிறார்.

அ.தி.மு.க. அரசின் கொரோனா தோல்வி வரலாறும் திமுக அரசின் கொரோனாவை வென்ற வரலாறும் நம் கண்முன்னே நிகழ்ந்தது. அதை மாற்றி எழுத எடப்பாடி பழனிச்சாமி சொல்லும் பொய்களும் புரட்டுகளும் ஒருபோதும் எடுபடாது.



விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர், முனைவர் தொல். திருமாவளவன் எம்.பி. மற்றும், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் ஆகியோர், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் முனைவர், வழக்கறிஞர் கு.மாலதி அவர்களுக்கு, கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நயினார்பாளையம், பெரிய சிறுவத்தூர், தென் கீரனூர், நீலமங்கலம், விருகாவூர், கூத்துக்குடி, தியாகதுருகம் ஆகிய பகுதியில் பொதுமக்களைச் சந்தித்து, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர், மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியின் சாதனைகளை எடுத்துரைத்து,பானை சின்னத்தில் வாக்குகளை சேகரித்தனர். இதில் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் பலர் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.

## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெல்லும் வேட்பாளர்களை ஆதரித்து
# விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாக்கு சேகரிப்பு!
## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ. அறிக்கை!



விழுப்புரம் வடக்கு மாவட்டம், செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் செஞ்சி தொகுதி தி.மு.க. வேட்பாளர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் எம்.எல்.ஏ, உதயசூரியன் சின்னத்திலும், மயிலம் தொகுதி தே.மு.தி.க. வேட்பாளர் வெங்கடேசன் முரசு சின்னத்திலும், திண்டிவனம் தொகுதி வி.சி.க. வேட்பாளர் வன்னியரசு பானை சின்னத்திலும் போட்டியிடுகின்றனர்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி சார்பில் போட்டியிடும் வெல்லும் வேட்பாளர்களை ஆதரித்து கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் (13.4.2026 - திங்கட்கிழமை) மாலை 4.00 மணிக்கு,

உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் செஞ்சி தொகுதி தி.மு.க. வேட்பாளர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் எம்.எல்.ஏ. வை ஆதரித்து செஞ்சி, விழுப்புரம் சாலை கன்மலை கிறிஸ்துவ ஆலயம் அருகிலும்,

முரசு சின்னத்தில் போட்டியிடும் மயிலம் தொகுதி தே.மு.தி.க. வேட்பாளர் வெங்கடேசனை ஆதரித்து தீவனூரிலும்,

பானை சின்னத்தில் போட்டியிடும் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி வி.சி.க. வேட்பாளர் வன்னியரசுவை ஆதரித்து மாலை 6.00 மணிக்கு திண்டிவனம் மேம்பாலம் அருகில் நடைபெறும் பிரச்சார பொதுக்கூட்டத்திலும் கலந்து கொண்டு வாக்கு சேகரிக்கிறார்.

இந்தப் பிரச்சார பொதுக்கூட்டத்தில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், அனைத்து அணிப் பொறுப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள், தி.மு.க. நிர்வாகிகள், தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ.**
பொறுப்பாளர், விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

## விவசாயிகள், கூலித் தொழிலாளிகளின் பிள்ளைகளை
# ‘நான் முதல்வன்’ திட்டம் மூலம் மாவட்ட ஆட்சியர் ஆக்கியவர் முதல்வர் மு.க.ஸ்டாலின்!
## செஞ்சி தொகுதி தேர்தல் பரப்புரையில் – செஞ்சி மஸ்தான் பேச்சு!

செஞ்சி, ஏப், 11 –

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி திமுக சார்பில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மூன்றாவது முறையாக போட்டியிடுகிறார்.

செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர், ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமையில் செஞ்சி கிழக்கு ஒன்றியம் அத்தியூர், கொசப்பாளையம், தச்சம்பட்டு,கீழ்நெல்லி மலை, நடுநெல்லிமலை, மூலநெல்லி மலைஆகிய கிரா மத்தில் வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது வாக்காளர்களிடம் திமுக வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வாக்கு சேகரித்து பேசுகையில்:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கல்விக்கும் மருத்துவத்திற்கும் எண்ணற்ற பல திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி உள்ளார் அந்த வகையில் கூலித் தொழிலாளியின் விவசாயியின் மகளை புதுமைப்பெண் நான் முதல்வன் திட்டத்தில் படிக்க வைத்துகரண்டி பிடித்த கை இன்றைக்கு கலெக்டர் ஆக்கியபெருமை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

தமிழ்நாடு முதலமைச்சர் தற்போது திமுக தேர்தல் அறிக்கையில் பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் அறிவித்துள்ளார். முதலமைச் சரின் காலை உணவு திட்டம் எட்டாம் வகுப்பு வரை விரிவு படுத்தப்படும். மகளிர் உரிமைத்தொகை ரூ2000 ஆக உயர்த்தி வழங்கப்படும் . நான் முதல்வன் தமிழ் புதல்வன் திட்டத் தில் பயன் அடையும் கல்வி மாணவர்களுக்கு மாதம் ரூ.1500. விவசாயிகளின் நலன் கருதி நெல் குவின்டாலுக்கு ரூ.3500 கரும்புட்டான் ஒன்றுக்கு ரூ.4500. மேலும் முதலமைச்சர் அறிவித்துள்ள சிறப்பு வாய்ந்த இத்திட்டங்களை மீண்டும் செயல்படுத்துவதற்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்தலைமையிலான 2.0 ஆட்சி மீண்டும் தொடர்வதற்கும் வாக்காளர்கள் ஆகிய நீங்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக உதய சூரியன் சின்னத்திற்கு வாக்களித்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெற செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன், ஒன்றிய துணைச் சேர்மன் ஜெயபாலன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், காங்கரஸ்வட்டாரத் தலைவர் சக்திவேல் சூரிய மூர்த்தி,கோனை ராஜா,தேமுதிக மாவட்ட பொருளாளர் தயாநிதி, சாரங்கபாணி, பிரபு, விசிக மாவட்ட செயலாளர் சிவா, நன்மாறன், திமுக ஒன்றிய நிர்வாகிகள் வாசு, ஆறுமுகம், அய்யாதுரை, இக்பால், செல்வமணி,ஒன்றிய கவுன்சிலர் மணி, ஊராட்சி மன்ற தலைவர் பாடிப்பள்ளம் தாட்சயாணி கார்த்திகேயன் முன்னால்ஊராட்சி மன்ற தலைவர் ரவிச்சந்திரன், ஊராட்சி கழக நிர்வாகிகள் அத்தியூர் விஜயகுமார், குணசேகரன், மாயவன், சண்முகம், ஜெய்சங்கர், கொசபாளையம் ஏழுமலை, நாகப்பன், காந்தி, தச்சம்பட்டு செந்தில் முருகன், மோகன் பெரியார், ஏழுமலை, தணிகாசலம், அஞ்சுலா தேவி ஆறுமுகம், கிருஷ்ணமூர்த்தி, வெங்கடேசன், நெல்லிமலை ஆனந்தன், கதிரவன், நாகமுனி, ராஜாராம், ஏழுமலை , பஞ்சமூர்த்தி, சுதாகர், பாண்டியன், செஞ்சி ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் பழனி உள்ளிட்ட தோழமைக் கட்சி நிர்வாகிகள் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ப.உ. சண்முகம்
### ஏப்ரல் 11 (2007)



**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் அன்பும், நட்பும் கொண்டவர். திருவண்ணாமலை நகர்மன்றத் தலைவராகவும், கலைஞர் அவர்களின் அரசில் அமைச்சராகவும், கழகத்தின் துணைப் பொதுச்செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**“தி.மு.க. வரலாற்று ஏட்டில் திருவண்ணாமலை இடைத்தேர்தல் ஓர் மகத்தான திருப்புமுனை. அந்தத் தேர்தலில் திருவண்ணாமலையிலேயே தங்கி, தேர்தல் பணியாற்றுமாறு அண்ணா அவர்கள் எனக்குக் கட்டளையிட்டிருந்தார். அந்த இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற தி.மு.க. வேட்பாளர் ப.உ. சண்முகம் அவர்களுக்கு ஒரு தனிச் சிறப்பும், தனிப் பெருமையும் வாய்த்தது என்றே சொல்லலாம். இடையிடையே என்னுடன் ஊடல் கொண்டாராயினும் – இறுதிவரை கொள்கைக் குன்றமெனத் திகழ்ந்த காரணத்தால் என் இதயத்தில் இடம் பெற்ற நண்பர்களில் ஒருவராகவே திகழ்ந்தவர்” என தலைவர் கலைஞர் அவர்களால் நினைவு கூரப்பட்டவர்.**

**தலைவர் கலைஞர் அவர்கள், 1993ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில், இவருக்கு ‘அண்ணா விருது’ வழங்கிச் சிறப்பித்தார்கள்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026
# விராலிமலை சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குழு நியமனம்

நடைபெறவிருக்கின்ற சட்டப்பேரவைத் தேர்தலில், புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், விராலிமலை சட்டமன்ற தொகுதி தேர்தல் பணிகளை கவனித்திட “தொகுதி தேர்தல் பணிக்குழு” பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**விராலிமலை தொகுதி தேர்தல் பணிக்குழு**

பரணி கார்த்திகேயன்
(தேர்தல் பணிக்குழுச் செயலாளர்)
எஸ். திருஞானசம்பந்தம்
(மூத்த வழக்கறிஞர்)
முனைவர் செ.குறிஞ்சிவாணன்

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 600 018
நாள் : 10.4.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## சட்டப்பேரவை பொதுத்தேர்தல் - 2026
# தொகுதிப் பார்வையாளர்கள் நியமனம்!
### (8வது பட்டியல்)

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கும் வகையில் முதற்கட்டமாக கீழ்கண்டவாறு சட்டமன்றத் தொகுதிகளின் பார்வையாளர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| சட்டமன்றத் தொகுதி | - பார்வையாளர் |
|---|---|
| விக்கிரவாண்டி, மதுராந்தகம் | – புதுச்சேரி ஆர்.சிவா |
| நாங்குநேரி | – எஸ்.முத்துலட்சுமி, முன்னாள் எம்.எல்.ஏ., |
| நாகப்பட்டினம் | – ஜெயப்பிரகாஷ் |
| பூம்புகார் | – ஏ.எம்.எச். நாசிம் |
| மொடக்குறிச்சி | – கே.ஈ. பிரகாஷ் |

**குறிப்பு : ஏற்கனவே தொகுதி பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 09.04.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



பண்ருட்டி சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் அ.ர.அப்துர் ரகுமானுக்கு பானை சின்னத்திற்கு, பண்ருட்டி நகர மன்ற தலைவர், நகர கழக செயலாளர் க .இராஜேந்திரன் தலைமையில் பண்ருட்டி நகரத்தில் 26, 25 ஆகிய வார்டில் வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரித்தனர் . இந்நிகழ்ச்சியில் ஆனந்தி சரவணன், குணசேகரன் ராஜா, ராமலிங்கம் , பிரபு , வழக்கறிஞர் பரணி சந்தர், சசிகுமார், தே.மு.தி.க, சேகர், பாக்யராஜ் , காசிம்,அப்துல் காதர், பன்னீர் நகர மன்ற உறுப்பினர்கள் சண்முகவள்ளி பழனி, லாவண்யா முத்துவேல், ரமேஷ் லோகநாதன், ஏழுமலை , தொகுதி தகவல் தொழில்நுட்பணி ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் நாராயணன், வேணு , நாகப்பன், முருகன் ,கிருஷ்ணமூர்த்தி , செல்வகுமார், தயாளன், சரவணன், ராஜ்கமல் , கோபி, பார்த்திபன், பிரபு, பாலச்சந்தர் , ராஜா, ராஜ் முஹம்மது , விக்கி கார்த்தி மோகன், மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் மகளிர் வாக்கு சேகரித்தனர்.